1981 மே 5]

கரூர் நகராட்சி சாலைகளைப் பழுது பார்க்கும் திட்டம்.

*வினா எண் 978—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகராட்சி சாலைகள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக பழுது பார்க்கப்படாமல் மிகவும் சீர்கெட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு உள்ளது குறித்து அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நானே அவரிடத்தில் கொடுத்திருக்கிறேன். அந்த கரூர் நகராட்சியில் இருக்கிற சாலைகள் கடந்த 5 ஆண்டுகள் காலமாக பழுது பார்க்கப்படாத காரணத்தால், போக்குவரத்தே மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. ஆகவே அந்த ரோடுகளை டெண்டர் விட்டால்கூட, ரேட் கட்டுப்படியாகாது என்கிற காரணத்தால் ஒப்பந்தக்காரர்கள் கூட யாரும் முன் வருவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் பொதுப் பணித் துறையே அந்த சாலைகளை எடுத்து பழுதுகளை சரிபார்க்கும் வகையில் அரசு ஆணை இடுமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 1979–80-ல் கூட 7 சாலைகள் செப்பனிடுவதற்காக எடுக்கப்பட்டது. 1980–81-ல் 5 பெரிய சாலைகளும் 25 சிறிய சாலைகளும் பழுதுபார்க்க எடுத்துக் கொள்ளப் பட்டன. 1981-82-ல் 73 சாலை களை செப்பனிடுவதற்கு, நகராட்சியின் வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு உடனடியாக சாலைகள் அனைத்தும் பழுது பார்க்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலைகளைப் போடுவதற்குத் தேவையான தார் சரியாகக் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். தேவையான தார் கிடைக்க அரசு தேவையான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தார் பொறுத்தவரையில் பொதுவாகவே தமிழ்நாட்டுக்கு குறைவான கோட்டாதான் மைய அரசு மூலமாகக் கொடுக்கப் பட்டு வருகிறது. அதிகப்படியான கோட்டா வழங்க வேண்டும் என்று ஏற்கனவே மத்திய பெட்ரோலிய அமைச்சரிடத்தில் நேரிடையாக நானே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். அவர்களும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை பல்க் பிட்டமின் ஆகத்தான் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அதை பாக்கெட் பிட்டமின்னாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். உடனடியாக கொடுக்கப் படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கொடுத்த உடன் வேலைகள் தொடங்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகராட்சி சாலைகள் மட்டுமல்ல, அநேகமாக தமிழகத்தில் இருக்கக் கூடிய அனைத்து சாலைகளுமே, தேசிய நெடுஞ்சாலைகள் நீங்கலாக எல்லா சாலைகளுமே பழுதுபட்டு வருகிறது. இன்னும் 4, 5 ஆண்டுகளுக்கு அப்படியே விட்டு விட்டால் நிச்சய மாக போக்குவரத்தே எங்கேயும் போகமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். இப்படிப்பட்ட ஒரு அபாயமான சூழ்நிலை ஏற்படுவ த தவிர்க்க, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த பாக்கெட் பிட்டுமனை கொஞ்சம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டு பெற்று, அனைத்து சாலைகளையும் பழுது பார்க்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் இருக்கக் கூடிய சாலை களை எல்லாம் உடனடியாக பழுது பார்க்க வேண்டும் என்று ஆணையரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதேபோல் மைய அரசு கொடுக்கக் கூடிய தாரைக் கூட அதிகமான அளவில் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற் கெனவே நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்து முதல்வர் புரட்சி தலைவர் அவர்கள் கூட நேரிடையாக மத்திய பெட்ரோலிய அமைச்சர் அவர்களுக்கு ஒரு டி.ஓ. லெட்டர்- நேர்முகக் கடிதம் எழுதி, கொடுக்கக்கூடிய கோட்டாவை அதிக மாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கென சீக்கிரமாக ஆணை ஒன்று மத்திய அரசிடமிருந்து பிறப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் கட்டிடங்கள் கட்டுவதானாலும், கழிப்பிடங்கள் கட்டுவதானாலும், பாது காப்பான சாலைகள், பழுது இல்லாத நிலையில் ஏற்படுத்தப்பட வேண்டுமானாலும், ஒப்பந்தக்காரர்கள் யாரும் அவ்வளவாக முன் வருவதில்லை. அதற்குக் காரணம் தமிழக சர்க்கார் அளிக்கும்

ரேட்டுகள் மிகக் குறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, இதை மனதில் கொண்டு, ஒப்பந்தக்காரர்கள் மனம் உவந்து முன் வந்து, ஒப்பந்தங்களை எடுக்கும் வகையில் அரசு அதற்கான ரேட்டுகளை உயர்த்திக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இருக்கிற நிலைமைகள் அனைத்தையும் கவனத்தில் கொண்டுதான் நாம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான கொள்ளை லாபம் அடிக்கிற சூழ்நிலையை அரசே ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலே அதிகம் கவனமாக இருக்கிறோம். ஆனால் பக்கத்து மாநிலங்களில் இருக்கிற ரேட்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழ்நாடு குறைவாகத்தான் கொடுக்கிறது என்ற காரணத்தால், தமிழகத்தில் இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் பக்கத்து மாநிலங்களுக்கு போகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவைகளை கவனத்தில் கொண்டு, எவ்வளவு தூரம் உயர்த்திக் கொடுத்தால், ஒப்பந்தக்காரர்களுக்குக் குறைந்த லாபத்தை வைத்துக் கொண்டு, நல்ல திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த முடியுமோ, அதை அரசு ஆராய்ந்து வருகிறது.

கரூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா என் 979—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க (மின்வெட்டு காரணமாக) ஜெனரேட்டர் ஒன்றும், இரண்டு டீசல் என்ஜின்களும் வாங்க அனுமதி கேட்டு நகராட்சி அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : பொதுவாக மின்வெட்டு காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அந்த நகராட்சிக்கு ஒரு ஜெனரேட்டர் வாங்க அரசு முன்வருமா ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கரூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் கரூர் நகராட்சியின் நிதி நிலைமை நன்றாக உள்ளது. ஆகவேதான் ஆட்சித் தலைவர் கூட அந்த கரூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS